**Deposition of Witness**
**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, THIRUMAYAM**

**O.S. No. 64 /2024**

Deposition of – PW1 / Plaintiff

| | | | |
|---|---|---|---|
| Name : | ஜோதி | Caste : | |
| Husband Name : | ராம்சுந்தர் | Calling : | |
| Village : | கட்டியாவயல் | Religion: | |
| District : | புதுக்கோட்டை | Age : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.10.2024

**முதல் விசாரணை**

நான் கட்டியாவயல், இராஜகோபாலபுரம் அஞ்சல், புதுக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனது தரப்பிலிருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் பிரமாண வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து அதில் கூறியுள்ள சங்கதிகள் சரியென ஒப்புக்கொண்டு தேவையான இடங்களில் என் கையொப்பம் போட்டுள்ளேன். எனது தரப்புக்கு ஆதரவாக ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

| **வ.எண்** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 20.04.2018 | கிரய ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ. 2 | 16.11.2011 | கிரய பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ. 3 | 22.12.2015 | பொது அதிகார பத்திரம் | அசல் |

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து சண்முகநாதன் என்பவருக்கு பாத்தியமாக இருந்தபோதே 1ம்பிரதிவாதி சண்முகநாதன் என்பவரிடம் வழக்கு சொத்தைபொறுத்து பொது அதிகார ஆவணம் வா.சா.3 எழுதி பதிந்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1ம்பிரதிவாதி சண்முகநாதனின் அதிகாரம் பெற்ற முகவர்என்ற முறையில் வழக்கு சொத்தைப்

பொறுத்து என்னிடம் வா.ச.ஆ1 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். இந்த 1–ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிகொடுத்த சண்முகநாதன் என்பவர் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை 2, 3 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த 1–ம் பிரதிவாதி முறையான ஆவணங்களின் அடிப்படையில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநா் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சாா்பு நீதிபதி,
திருமயம்.

**Deposition of Witness**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, THIRUMAYAM**

**O.S. No. 64 /2024**

Deposition of – PW2

| | | | |
|---|---|---|---|
| Name : | பழனிவேலு | Caste : | |
| Father's Name : | அடைக்கலம் | Calling : | |
| Village : | சாத்தனூர் | Religion: | |
| District : | புதுக்கோட்டை | Age : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.10.2024

**முதல் விசாரணை**

நான் சாத்தனூர் கிராமம், பொன்னமராவதி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் பிரமாண வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து அதில் கூறியுள்ள சங்கதிகள் சரியென ஒப்புக்கொண்டு தேவையான இடங்களில் என் கையொப்பம் போட்டுள்ளேன்.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1–ம்பிரதிவாதி சண்முகநாதன் என்பவரிடம் எழுதி வாங்கிய பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ 3–ல் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கும் , 1–ம்பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட வா.சா.ஆ 1 கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.